2 பாடம்

# எரிகோவிலிருந்து தப்புதல்

***இயேசுவைப் பற்றிப் பிரசங்ககித்தால் தண்டனை தரும் ஒரு நாட்டில் இவாஞ்சலின் வாழ்ந்தாள். இரகசியமாக போர்வைக்குள் ஒளிந்துகொண்டு மேசை அடியில் இருந்து இயேசுவைப் பற்றிய நற்செய்தியை 'டைப்' செய்தாள். ஆனாலும், காவலர்களால் கண்டு பிடிக்கப்பட்டு தண்டனைபெற்றாள். அதே போன்ற ஓர் இரகசியச் செயலைப் பார்ப்போமா?***

கானான் தேசத்தைப்பற்றி நற்செய்தி சொன்ன யோசுவா இப்போது இஸ்ரவேலரின் தலைவராக இருந்தார். 40 வருடங்கள் கழிந்துவிட்டன. இப்போதும் யோசுவா இஸ்ரவேலருடன் தேவனை மகிமைப் படுத்தக்கூடிய வார்த்தைகளையே பேசிவந்தார். முன்பு மோசே அனுப்பியபடியே யோசுவாவும் எரிகோவை வேவுபார்த்து வருமாறு இருவரை அனுப்பினார்.

யோசுவா அனுப்பிய அந்த இருவரும் எரிகோவிலுள்ள ராகாப் எனும் ஒரு பெண்ணின் வீட்டிற்குச் சென்று இரவில் அங்கே தங்கினார்கள். அந்த வீடு அலங்கத்தின் சுவரில் கட்டப்பட்டிருந்தது. இஸ்ரவேலரின் தேவனைப்பற்றி ராகாப் நன்கு அறிந்திருந்தாள். எனவேதான், அவர்களுக்கு தன் வீட்டிலே அடைக்கலம் கொடுத்தாள்.

இஸ்ரவேலருக்காக தேவன் செய்யும் யுத்தங்களையும், வெற்றிகளையும் எரிகோவில் உள்ளவர்கள் நன்கு அறிந்திருந்தனர். எனவே, அரசனும், மக்களும் பயந்திருந்தார்கள்.

அந்த இருவரையும் ராகாப் தனது வீட்டின் மேலே ஏறச் செய்தாள். அங்கே பரப்பப்பட்டிருந்த சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்தாள். ஆனாலும் அவளது இரகசியச் செயல் ராஜாவுக்குத் தெரிந்து விட்டது. எனவே ராஜா தனது



## மனன வசனம்

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். மத்தேயு 6:33.**

நாட்டை வேவுபார்க்க வந்த அந்த இரு ஒற்றர்களையும் உடனே அழைத்துவரும்படி தன் வீரர்களுக்குக் கட்டளை யிட்டார்.

ராகாப் அந்த வீரர்களிடம், "இரு இஸ்ரவேலர்கள் வீட்டிற்கு வந்தனர்; ஆனாலும் இரவிலே போய்விட்டார்கள். எங்கே சென்றனரோ தெரியாது. சீக்கிர மாய்ப் போய்த் தேடினால் அவர்களைப் பிடித்துக்கொள்ள லாம்" என்றாள். வீரரும் அவ் வாறே தேடச்சென்றார்கள்.

ராகாப் தன் வீட்டு மாடிக் குச் சென்றாள். அந்த இஸ்ர வேலர் இருவரும் இன்னும் தூங்காமல்தான் இருந்தார்கள். அவர்களிடம் ராகாப், "கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தார் என்று நான் அறிகிறேன்; இங்கிருக்கிற யாவரும் உங்களுக்குப் பயந்து தான் இருக்கிறார்கள். எகிப்தி லிருந்து நீங்கள் யாவரும் புறப் பட்டது முதல் தேவன் உங்களுக் காகச் செய்த எல்லா அற்புதங் களையும், கேள்விப்பட்டோம். நான் உங்கள் இருவருடைய உயிரையும் காப்பாற்றியது போல் நீங்களும் எனக்கு உதவவேண்டும். தேசத்தை தேவன் உங்கள் கையில் ஒப்புக் கொடுக்கும்போது, என் தகப் பன் குடும்பத்தாரைக் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றுவீர்கள் என்பதற்கு ஆதாரமாக ஓர் அடையாளத்தைத் தர வேண்டும்" என்றாள்.

அதற்கு அந்த இருவரும், "எங்கள் உயிரே உங்கள் உயி ருக்குப் பதிலாகும்; தேவன் இந்த தேசத்தைக் கொடுக்கும் போது, நாங்கள் நிச்சயம் உங் களிடம் எங்கள் அன்பைக் காட்டுவோம்; உண்மையுள்ள வர்களாகவே நடந்து கொள்வோம்" என்றனர்.

மேலும், "நாங்கள் மீண்டும் இந்த தேசத்துக்குள் வரும்போது எங்களை இறக்கி



# செய்தி

**எது முக்கியம் என்பதை நாமும் சபைக்குடும்பத்துடன் கற்று அறிகிறோம்.**

விடுகிற இந்த ஜன்னலிலே இந்தச் சிவப்பு நூல் கயிற்றை மறக்காமல் கட்டிவிடு. அப்படி யானால், யாராலும் நீங்கள் அழியாதபடி உங்களைக் காப் பாற்ற அது வசதியாயிருக் கும்;அப்படிக் கட்டவில்லை யென்றால் நாங்கள் அதற்குப் பொறுப்பல்ல'' என்றார்கள். ராகாப் சம்மதித்தாள். பின்னர் அவர்களை ஜன்னல் வழியே பத்திரமாக இறக்கிவிட்டாள். அப்படியே அந்தச் சிவப்புக் கயிற்றை ஜன்னலிலே கட்டி வைத்தாள்.

இஸ்ரவேலரின் தேவனே உண்மையான தெய்வம் என ராகாப் அறிந்துகொண்டாள். அன்றிலிருந்து தேவனை ஏற் றுக்கொண்டு தேவனின் பிள் ளையாக மாறி வாழலானாள்.

என் பிரியமே! இஸ்ர வேலரின் தேவனே உண்மை தெய்வம் என்று அறிவாயா?

**செய்முறை:** *நாம் வாழ்வில் முதன்முதலாக எதைத் தேடவேண்டும்? எழுத்து களையும் குறியீடுகளையும் பயன்படுத்தி பதிலை எழுது.*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம் ℊ | யு ❤ | ை ➳ | ே ✈ | ய ♣ | த ♦ | த் ♥ | நீ ♠ |
| வ ✷ | ட ❊ | னு ☛ | ா ➡ | ஜ் ➤ | ர ✿ | தி ❖ | இ ✪ |

## புதிர் ௨

___ ___ ___ ___ ___ ___ ___

✈ ♦ ✷ ☛ ➳ ❊ ♣

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___

✿ ➡ ➤ ♣ ♥ ➳ ♦ ❤ ℊ

___ ___ ___ ___ ___ ___

♠ ❖ ➳ ♣ ❤ ℊ